ஏப்ரல் 2021–ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of April 2021)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

**கடித எண்.8250/பக5(1)/2021 – 1, நாள்: 30.04.2021**

அனுப்புநர்
திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை–01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் 6156 தற்காலிகப் பணியிடங்களுக்கு ஏப்ரல் 2021–ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல் – சார்ந்து.

பார்வை :
1. அரசாணை (1டி) எண்.389, பள்ளிக்கல்வி [பக5(1)] த் துறை, நாள் 24.05.2018.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.001508/ எல்/இ3/2021, நாள் 23.04.2021.

------

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், பல்வேறு அரசாணைகளின்படி தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட அரசு / நகராட்சி / உதவிபெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள 6,156 தற்காலிக ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு கடைசியாக 01.01.2018 முதல் 31.12.2020 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேற்காணும் தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2021 முதல் மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி இயக்குநர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். இப்பணியிடங்களுக்கு ஏப்ரல் 2021ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. பார்வை 1ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2021 முதல் 31.12.2023 வரை மூன்றாண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், இக்கடிதத்தின் இணைப்புகளில் I - VI–ல் கண்டுள்ள 6156 பணியிடங்களுக்கு ஏப்ரல் 2021–ஆம் மாதத்திற்கான ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஏப்ரல் 2021–ம் மாதத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய

அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும்பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

30/4/2021

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு முதன்மைச் செயலாளருக்காக

5/6

**நகல்**
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
நிதி(கல்வி–II)துறை , சென்னை–9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

30/04/2021

ந.க.எண். 0066/எல்/இ3/21, நாள்: 30.4.21

(நகல்) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது

30/04/2021

Director of School Education
Chennai-600 006.

பெறுநர்

30/4/21

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.